

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2024) பெரியார் நகர் அரசு புறநகர் மருத்துவமனையில் தரை மற்றும் 6 தளங்களுடன் 109 கோடியே 89 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சிறப்பு மருத்துவமனையின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.8.2024) நீர்வள ஆதாரத் துறை சார்பில் அயனாவரம் மற்றும் மாதவரம் வட்டத்தில் அமைந்துள்ள தணிகாசலம் நகரில் 91 கோடியே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உபரிநீர் கால்வாயினை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சுதர்சனம், தாயகம் கவி, அ. வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு. மகேஷ் குமார், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தேர்தல் காலத்தில் வெயில் காரணமாக பணியின்போது இறந்த

# அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கும் திட்டம் உள்ளதா?

## மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஆக. 6 -

தேர்தல் காலத்தில் வெயில் காரணமாக பணியின்போது உயிர் நீத்த அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கும் திட்டம் ஏதாவது ஒன்றிய அரசிடம் உள்ளதா என்று மக்களவையில் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பினார்.



நாடாளுமன்றத்தில் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எழுத்துப்பூர்வமாக பின்வரும் கேள்விகளைக் கேட்டிருந்தார்.

அது வருமாறு:

“கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டில் வெப்ப அலைகள் காரணமாக நிகழ்ந்த இறப்புகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள், இத்தகைய வெப்ப அலைகளின் போது மக்களைப் பாதுகாக்க அரசு எடுத்த/எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்;

தேர்தல் காலத்தில் வெயிலின் காரணமாக பணியின் போது இறந்த அரசு ஊழியர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் திட்டமிடுகிறதா/முன்மொழிகிறதா?

இந்தக் கேள்விகளுக்கு அறிவியல் தொழில் நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறை இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு) டாக்டர் ஜிதேந்திர சிங் எழுத்துபூர்வமாக அளித்த பதில், வருமாறு:

“நாடு முழுதும் வெப்ப அலைகளால் 2013 ஆம் ஆண்டில் 1,216 பேர்கள், 2014 இல் 1248 பேர்கள், 2015 இல் 1908 பேர்கள், 2016 இல் 1338 பேர்கள், 2017 இல் 1127 பேர்கள், 2018 இல் 890 பேர்கள், 2019 இல் 1274 பேர்கள், 2020 இல் 530 பேர்கள், 2021 இல் 374 பேர்கள், 2022 இல் 730 பேர்கள் மரணம் அடைந்தனர்.

குறிப்பாக தமிழ்நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் வெப்ப அலைகளால் இறந்தவர்களின் எண்ணிக்கை மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது மிகவும் குறைவு. கடந்த பத்து வருடங்களில் 5 பேர்கள் தான் தமிழ்நாட்டில் வெப்ப அலைகளால் இறந்தவர்கள் ஆவர்.

அதிகபட்சமாக ஆந்திர மாநிலத்தில் 2013 இல் 418 பேர், 2014 இல் 244 பேர், 2015 இல் 654 பேர், 2016 இல் 312 பேர், 2017 இல் 231 பேர், 2018 இல் 97 பேர், 2019இல் 128 பேர், 2020 இல் 50 பேர், 2021 இல் 22 பேர், 2022 இல் 47 பேர் இறந்துவிட்டனர்.

தேசிய குற்றப் பதிவுப் பணியகம் (NCRB), உள்துறை அமைச்சகம் ஆகியவை வழங்கிய விவரங்கள் மூலமாக மேற்கண்ட தரவுகள் கிடைக்கப்பட்டுள்ளன. இந்திய வானிலை ஆய்வுத் துறை (IMD) கண்காணிப்பு மற்றும் முன் எச்சரிக்கை அமைப்புகளை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது,

இது வெப்ப அலைகள் உட்பட தீவிர வானிலை நிகழ்வுகளின் போது உயிர் மற்றும் சொத்து இழப்பைக் குறைக்க உதவியது. பருவகால கால மற்றும் மாதாந்திரக் கண்ணோட்டத்தை வழங்குதல், அதைத் தொடர்ந்து வெப்பநிலை மற்றும் வெப்ப அலை நிலைகளின் நீட்டிக்கப்பட்ட வரம்பு முன்னறிவிப்பு...

இந்தியா முழுவதும் மாவட்ட வாரியான வெப்ப அலை பாதிப்பு அட்லஸ் தயாரித்து மாநில அரசு அதிகாரிகள் மற்றும் பேரிடர் மேலாண்மை நிறுவனங்களுக்கு வழங்கி தகுந்த நடவடிக்கை எடுப்பதில் உதவுதல்...

தினசரி வெப்பநிலை, காற்றின் ஈரப்பதம் போன்றவற்றை உள்ளடக்கிய இந்தியாவின் வானிலை அபாய பகுப்பாய்வு...

முழு நாட்டிற்கான ஹீட் இன்டெக்ஸ் முன்னறிவிப்பு மற்றும் மாவட்ட அளவில் வெப்ப அலை நிலைகளின் தாக்கம் சார்ந்த முன்னறிவிப்பு, வெப்.ஜி.ஐ.எஸ். இயங்குதளத்தில் நிகழ்நேர வெப்ப அலை தகவல் மற்றும் எச்சரிக்கைகள் வெளியிடுதல்...

மாநில அரசுகளுடன் இணைந்து தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் கூட்டாக வெப்ப செயல் திட்டங்கள் வெப்ப அலை வாய்ப்புள்ள 23 மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன...

யூடியூப், பேஸ்புக், வாட்ஸ்அப், எக்ஸ் பிளாட்ஃபார்ம், இன்ஸ்டாகிராம் போன்ற நவீன சமூக தளங்கள் மூலமாக வெப்ப அலை பற்றிய முன்னறிவிப்பு மற்றும் எச்சரிக்கைப் பரப்புதல் சேவைகளை மேம்படுத்துதல்.

ஆகியவற்றை மேற்கொண்டு வருகிறது.

தேர்தல் காலத்தில் வெப்ப அலை தாக்கத்தால் உயிரிழந்த அரசு ஊழியர்களுக்கு நிவாரணம் அளிப்பது தொடர்பான விவகாரத்தில் மாநிலங்களுக்கு, மாநில பேரிடர் மறுமொழி நிதி (SDRF) மற்றும் மாநில பேரிடர் தணிப்பு நிதி (SDMF) மூலம் நிதி ஆதரவு கிடைக்கும்.

நிதி உதவிக்காக மாநிலங்களிடமிருந்து கோரிக்கை இருந்தால், தேசிய பேரிடர் மறுமொழி நிதி (NDRF) மற்றும் தேசிய பேரிடர் தணிப்பு நிதி (NDMF) வழங்குவதற்காக, தொடர்புடைய வழிகாட்டுதல்களின்படி ஒன்றிய அரசு அதை பரிசீலிக்கும்”

இவ்வாறு ஒன்றிய இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் பதிலளித்தார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவுநாள்! சைதை மேற்கு பகுதியில்

# 2000 பேருக்கு அறுசுவை உணவு - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

## பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., வேண்டுகோள்!

சென்னை, ஆக.6-

தமிழ்நாட்டை வடித்தெடுத்த சிற்பி, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்காக தன்னையே ஒப்படைத்து அவர்களின் வாழ்க்கையை உயர்த்திட தனது இறுதி மூச்சு வரை உழைத்த பெருமகனார் தமிழ்நாட்டு மக்களுக்காக, தமிழ்நாட்டிற்காக தமிழ்மொழிக்காக அவர் தீட்டிய திட்டங்கள் தான் இன்றும் உயிர்ப்புடன் திகழ்ந்து கொண்டிருக்கின்றன என்றால் அதற்கு முழுமுதற் காரணம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே! மாற்றுதிறனாளிகளுக்கான நல்வாழ்வுத்திட்டம், ஆதிதிராவிடர்களுக்கான இலவச கான்கிரீட் வீடுகள் கட்டும் திட்டம், பட்டியிலின மக்களுக்கான உள்ஒதுக்கீடு, அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் சட்டம், பெண்களுக்கு சொத்தில் சமஉரிமை, பெண்களுக்கு திருமண உதவித்தொகை வழங்கும் திட்டம், மகளிருக்கு அரசு வேலைவாய்ப்பில் 30 சதவிகிதம், உள்ளாட்சித்துறையில், இந்தியாவிலே முதன் முதலாக 31 சதவிகித இடஒதுக்கீடு வழங்கும் திட்டம், மகளிர் சுயஉதவிக்குழு அமைத்தல், மகப்பேறு நிதி உதவி திட்டம், அருந்ததியினருக்கு 3 சதவிகித இடஒதுக்கீடு, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், நிலம் இல்லாத ஏழை விவசாயி களுக்கு இலவச நிலம், விவசாயிகளின் கூட்டுறவு கடன் ரத்து, உழவர்சந்தைகள், பெரியார் நினைவு சமத்துவபுர திட்டம், நாடு போற்றும் அண்ணா நூற்றாண்டு நூலகம் அமைத்தல், தமிழ் மொழிக்கு செம்மொழி அங்கீகாரம், குமரியில் 133 அடி வான் உயர வள்ளுவனுக்கு சிலை அமைத்தல், ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, இலவச வண்ண தொலைக்காட்சிபெட்டி, தை முதல்நாள் தமிழ் புத்தாண்டு, தைப்பொங்கலுக்கு அரசு ஊழியர்களுக்கு பொங்கல் பரிசு, ரேஷன் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச பொங்கல் பொருட்கள்,

இப்படி தமிழ்நாட்டில் கலைஞர் அவர்களின் நினைவை என்றென்றும் போற்றும் முத்தமிழறிஞர் தமிழினத்தலைவர் கலைஞர் அவர்களின் (07.08.2024 - புதன்கிழமை), 6ம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும், பொதுக் குழு உறுப்பினர்கள், சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., பகுதி கழக நிர்வாகிகள், களக்காடிஎல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன் ஆகியோர் முன்னிலையிலும்,

வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன் வரவேற்பில், சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் உள்ள சைதை மேற்கு பகுதி கழக அலுவலகத்தில் நண்பகல் 12 மணியளவில் சென்னை தெற்கு மாவட்ட கழகசெயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி 2000 பேருக்கு அறுசுவைஉணவினை வழங்குகிறார்.

எனவே சைதை மேற்குபகுதிக்குட்பட்ட அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி துணைஅமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், ஆகியோர் தவறாமல் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்து தருமாறு பகுதி கழக செயலாளரும் பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் டி.லோகேஷ் அறிவிப்பு!

சென்னை, ஆக.06

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக்கூட்டம் இன்று 06-08-2024, காலை 8:30 மணிக்கு எம்.கே.டி. மகாலில் (ஓட்டேரி) சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.லோகேஷ் எனது தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் இந்து சமய அறநிலயத்துறை அமைச்சரும் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி.கே.சேகர்பாபு ஆலோசனை வழங்க இருக்கிறார்.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்களின் முன்னிலையில் இளைஞர் அணி ஆலோசனைக்கூட்டம் நடக்க இருப்பதால் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் டி.லோகேஷ் கேட்டுக் கொண்டுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6வது நினைவுநாள் அமைதிப் பேரணி! கலைஞர் புகழ்போற்றி

# கழகத் தலைவர் தலைமையில் அணி வகுப்போம்!

## சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தினருக்கு - மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

சென்னை, ஆக 6-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6வது நினைவுநாளை முன்னிட்டு கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் ஆக.7 புதன்கிழமை காலை 7 மணிக்கு சென்னை அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்வில் சென்னை தெற்கு மாவட்டத்தினர் பெருந்திரளாக பங்கேற்க மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



“முத்தமிழறிஞர் கலைஞர்” எனும் இந்த சொற்றொடர் இருபதாம் நூற்றாண்டையும், இருபத்தொன்றாம் நூற்றாண்டையும் இணைக்கும் ஒரு வரலாற்றுப் பாலமாக தீபகற்ப இந்தியாவில் திகழ்கிறது. ‘கலைஞர்’ எனும் இந்த ஒற்றைச் சொல்தான் கடந்த எண்பது ஆண்டு காலமாய் திராவிடப் பொன்னாட்டின் தவிர்க்க முடியாத சரித்திரமாய் விளங்கியது.

தமிழ் இனம் வாழ, தமிழ்நிலம் தழைத்தோங்க, தன்னையே ஒரு கொடையாய் மானுடத்திற்கு எடுத்தளித்து, தன்னிகரில்லாத் தலைவராய், தன்மானப் புரட்சியின் தத்துவமாய் விளங்கினார். அவர்தான் இங்கு நிலவிய சாதி, இனபேத சாபக்கேடுகளை தகர்த்தெறிந்தார். முத்துவேலர் ஈன்றெடுத்த அந்த முதுபெரும் அறிஞர்தான் மூடத்தனத்தின் இழிவுகளை அகற்றி, முடைநாற்றம் வீசும் பழைய பஞ்சாங்கத்தின் அவலங்களை, நீக்கி தமிழர்க்கு ஒரு தலைநிமிர்வை வழங்கினார். அந்த சுயமரியாதைத் தத்துவ ஆசான்தான், தமிழ்பூமியின் திசையெங்கும் சமத்துவத்தை, சகோதரத்துவத்தை சமூகநீதியை ஓயாமல் முழங்கினார்.

அன்னை அஞ்சுகம் கருவறை சுமந்த ‘கலைஞர்’ எனும் நெருப்புதான், ஏற்றத்தாழ்வு எனும் முட்காட்டை எரித்து, முப்போதும் இங்கு ‘அமைதி மலர்க்காட்டின்’ ஆனந்தத் தென்றல் வீசுவதற்கு அடித்தளமிட்டது. கலைஞரின் எழுதுகோல்தான் கயமையின் முதுகெலும்பை முறித்துப் போட்டது, கலைஞரின் கரகரத்தக் அந்தக் காந்தக் குரல் தான் ஆரிய வஞ்சகத்தின் ஆணிவேரில் வெப்பக் கோடரியை இறுக்கியது.

தந்தைப் பெரியாரின் மாணவராய், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் தம்பியாய் அவர் கண்ட களங்கள் ஒன்றிரண்டல்ல, அது வட்டத்திற்குள் அடைபடாத வானம் போன்றது. கைகளில் அள்ளி காணமுடியாத கடல்போன்றது. தமிழ் இனம் வாழ அவர் தன்னை ஒரு தியாக மெழுகாய் ஆக்கிக்கொண்டார்.

வள்ளுவன் காட்டிய வழியில் நின்று - இனம் - மொழிக் களத்தில் தன்னை ஒரு படைவீரனாய் மாற்றிக்கொண்டார். தனக்கென்ற வாழாத ஒரு தகைசால் தலைமையின் அத்தனை இலக்கணமும் கலைஞர் அவர்களையே சாரும். வஞ்சகங்களையும், துரோகங்களையும் தம் நெஞ்சுரத்தால் வென்றுகாட்டி இன்று நூற்றாண்டு போற்றும் தலைவராய் விளங்குகிறார் எனில் அது தமிழ்நாடு செய்த பகுத்தறிவுப் புரட்சியின் வெளிப்பாடு.

ஐந்து முறை நாடாண்ட அந்த ஐந்தமிழ்ச் சூரியன் ஆற்றிய தொண்டுகளும், சேவைகளும் சொல்லி முடிக்க முடியாத சாதனையின் பக்கங்களாகும். நாடு உயர பலநூறு திட்டங்கள் தீட்டினார். நாட்டுமக்கள் தலைநிமிர பல்லாயிரம் ஏடுகள் நிரம்பிய சட்டங்கள் தீட்டினார். கலைஞரால் நாடு வளம்பெற்றது. கலைஞரைக் கண்டு இந்திய ஒன்றியங்கள் வணங்கிப் போற்றின. காரணம் அவர் கொண்டுவந்த திட்டங்கள் இந்தியா முழுமைக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கி, மாநிலங்கள் கடைப்பிடிக்கும் மகத்துவத்தைப் பெற்றிருந்தன.

மாநில சுயாட்சியின் தந்தையாகப் போற்றப்படும் முத்தமிழறிஞர்தான், மாநிலங்களின் உரிமைகளை மீட்டுத்தந்த மகத்தானத் தலைவராக விளங்கினார். அவர் இந்தியாவின் ஒளிவீசும் கிழக்காக இருந்தார். அவர் எல்லோர்க்குமான வானமாக, மழையாக, பூமியாக விளங்கினார். அதனால் தான் நாடும் அவரை கண்ணுக்குள் வைத்துப் போற்றிக்கொண்டாடுகிறது. கலைஞர் இயற்கையின் மடியில் கண்ணுறங்கச் சென்று ஆண்டுகள் ஆறு ஆனாலும், அவர் புகழ் கடுகளவும், நெல்முனையளவும் குறையவில்லை. அவற்றை நம் திராவிட மாடல் நாயகர், தமிழ்நாட்டின் முதல்வர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் கம்பீரமாய் முன்னெடுத்துச் செல்கிறார். தமிழ்நாடு எல்லார்க்கும் எல்லாம், அனைவருக்கும் அனைத்தும் என்ற இடம்நோக்கி வெற்றிநடைபோடுகிறது.

சென்னை அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புதன் கிழமை காலை 7 மணிக்கு அமைதிப் பேரணி புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் வைத்து கழகத் தலைவர் அஞ்சலி செலுத்துகிறார். கலைஞர் துயில்கொள்ளும், இடம் நோக்கி சென்னை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், கழக மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய கழக செயலாளர்கள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள்,

மாவட்ட, பகுதி, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட, பகுதி, ஒன்றிய அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி துணைச் செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாகப் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவைப் போற்றுவோம்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை விடுத்துள்ளார்.

### வளரும் தலைமுறையை வளர்த்தெடுக்க

# திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம் தொடக்கம்!

## திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் முன்னிலையில் தொடங்கப்பட்டது!

சென்னை, ஆக. 6-

தமிழ்ச்சமூகம் தொன்மையானது. தமிழ்சமூகக் கட்டமைப்பை அடித்தளமாகக் கொண்டே திராவிடக் கருத்தியல் அனைத்துத் தளங்களிலும் விரவிக் கிடக்கிறது. திராவிட இனத்தின் மேம்பாடு என்பது தமிழர் வளர்ச்சியை மையப்படுத்தியதுதான் என்ற உண்மையை உரக்கச் சொல்லவேண்டியவர்களாக இருக்கிறோம். சமூக சமத்துவத்தை இயல்பாகவே வாழ்வின் மதிப்பீடாகக் கொண்டுள்ள நம்முன், ஆரியத்தின் தாக்கம் நெடுங்காலமாகவே ஊடுருவியுள்ளது. சமூக ஏற்றத்தாழ்வினையும், மூடநம்பிக்கைகளையும் நம்முள் ஆழமாக உருவாக்கிவிட்டிருக்கிறது. இதனை அறியாமல் பல்லாண்டுகாலமாக அடிப்படை மானுட மதிப்புகளின்றி அடிமை வாழ்வு வாழ்ந்தோம். நமது தமிழ்ச் சமூக வேர்களிலிருந்து உருவான திராவிடச் சிந்தனைகளை வலியுறுத்திய தலைவர்கள் தோன்றி அடிமைநிலையிலிருந்த நம்மை மீட்டெடுக்க முற்பட்டனர் என்பது வரலாறு. நமக்கு உணர்த்தும் பாடம்.

நமது சமூகம், அரசியல், பொருளாதார, பண்பாட்டு நிலைகளிலிருந்து இந்த ஆரிய ஆதிக்கத்தால் மாறத் தொடங்கியது. எனவே, திராவிடக் கருத்தியலை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல வேண்டிய கடமை நம்முன் இருக்கிறது. இடையில் ஏற்பட்ட பண்பாட்டில் ஏற்பட்ட தொய்வு நமது தமிழ்ச்சமூகத்தினை கடுமையாக தாக்கியுள்ளது என்பது அனைவரும் உணர்ந்துள்ள உண்மையாகும். ஆரியத்தின் தாக்கம் நம்மை சாதிகளாகப் பிரித்து வைத்துள்ளது. தலைவிதியை நம்ப வைத்துள்ளது. சமூக ஏற்றத்தாழ்வு நிலையை வாழ்வின் எதார்த்தம் என்று வழிந்து சுமக்க வைத்துள்ளது. இனி எதுவுமே நம்மால் செய்ய இயலாது என்ற கையறு நிலையில் கொண்டுபோய் நிறுத்தியுள்ளது.

இந்த நிலையில் இது போன்ற பிற்போக்குத் மனத்திலிருந்து நாம் விடுபடவும், நமது எதிர்கால தலைமுறையை விடுவித்திடவும் அணிதிரள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. தமிழ்த்தலைவர்கள் மேற்கொண்ட கருத்தியல் பிரச்சாரம் உரிய பலன் தந்தது. நாம் பெற்றிருக்கும் மகிழ்வான, நிறைவான வாழ்வை நமது எதிர்கால தலைமுறைக்கும் வழங்க வேண்டாமா? சிந்திப்போம். இந்த நிலையில்தான் ஆசிரியர் சமூகம் அறிவுச்சமூகமாக ஒன்றிணைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**“திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம்”**

01.08.2024 அன்று திராவிட இயக்கப் பேரவைத் தலைவர் சுப.வீர பாண்டியன் முன்னிலையில் தொடங்கப்பட்டுள்ள “திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கம்” இந்த வலுவான, ஆனால் காலத்திற்கு ஏற்ற பிரச்சாரத்தை முன்னெடுக்கும். திராவிடத்தைத் தாங்கிப் பிடிப்பவர்களால்தான் ஆரிய ஏகாதிபத்தியத்தை வேரறுக்க முடியும். ஆதிக்கம் செய்வோர், ஆணாதிக்கம் செய்வோர், பிற்போக்கு சிந்தனைகளைப் பரப்புவோர், அறிவியல் சிந்தனைகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்வோர், ஆரிய இந்துத்துவ சிந்தனைகளைப் பரப்புவோர் திராவிடத்தின் எதிரிகளாக அடையாளம் காணப்பட்டு அவர்களின் செயல்களுக்கு எதிர்வினை ஆற்ற வேண்டியும், திராவிடக் கருத்தியலில் இப்போதைய வளரும் தலைமுறையை வளர்த்தெடுக்க வேண்டிய நோக்கத்தில் தான் இப்பண்பாட்டு அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.

இதில் யார் யார் சேர முடியும் என்ற கேள்வி இயல்பானதே! தமிழரின், மானுடத்தின் மேம்பாட்டிற்காக உழைக்கவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள், எந்தவொரு பல்கலைக்கழகம், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரியும், தனியார் மற்றும் அனைத்துவித கல்வி நிறுவனங்களில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பணியாற்றும் ஆசிரியர்களும், பேராசிரியர்களும், அனைத்து வித அரசு, அரசு உதவிபெறும் அல்லது தனியார் பள்ளிகளைச் சார்ந்த ஆசிரியர்களும், கல்விப்பணியில் ஈடுபட்டு வரும் அலுவலகப் பணியாளர்களும் இவ்வமைப்பில் சேரலாம். இந்த திராவிடக் கருத்தில் ஆசிரியர் சங்கத்தில் சேர்வதற்கு எவ்விதக் கட்டணமும் கிடையாது. ஆனால், திராவிடக் கருத்தியலில் அடுத்தடுத்த தலைமுறையை வார்த்தெடுக்கவும், வளர்த்தெடுக்கவும் இவ்வமைப்பின் உறுப்பினர்களுக்கு தலையாய கடமை உண்டு என்பதே திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் நோக்கமாகும்” என பேராசிரியர் முனைவர் மு.தேன்மொழி பொன்.முத்துராமலிங்கம் தெரிவித்துள்ளார்.